GCI

# பாடம் 3
# தலைமைத்துவம்

<u>முன்னுரை</u>:

நோக்கம்:

- தலைமைத்துவத்தில் குணநலன்களின் அவசியத்தை அறிந்து கொள்ள
- வெவ்வேறு தலைமைத்துவ பண்புகளை கண்டுகொள்ள
- உங்கள் தலைமைத்துவத்தை மேம்படுத்தும் வழிகளை அறிந்து கொள்ள

<u>பாடதிட்டம்:</u>

1. தலைமைத்துவத்தின் முக்கியத்துவம்

    அ. தலைமைத்துவம் என்றால் என்ன?
    ஆ. தலைமைத்துவம் மாதிரியை நிலைநிறுத்துவதாகும்
    இ. தலைமைத்துவத்தின் அழைப்பு
    ஈ. தலைமைத்துவத்திற்கான ஆயத்தம்

2. தலைமைத்துவமும் பரிசுத்தமும்

    அ. தலைவர்களாகிய நாம் பரிசுத்தமாயிருக்க வேண்டும்
    ஆ. நாம் பரிசுத்தமாயிருப்பது எப்படி?
    இ. கறைபடுவதற்கான வாய்ப்புகள்
    ஈ. பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை வாழ்ந்த தலைவர்களின் மாதிரிகள்
    உ. பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை வாழாத தலைவர்களின் மாதிரிகள்

3. தலைமைத்துவமும் நேர்மையும்

    அ. நீதியாய் வாழ்வதின் நோக்கம்
    ஆ. நேர்மையான தலைவர்கள் பெற்ற ஆசீர்வாதங்கள்
    இ. நேர்மையான தலைவர்களின் மாதிரிகள்
    ஈ. நேர்மையில்லாத தலைவர்களின் மாதிரிகள்
    உ. நேர்மையுள்ள வாழ்க்கையின் முக்கிய கட்டங்கள்
    ஊ. நேர்மை வாழக்கைக்கான திறவுகோல்கள்

4. தலைமைத்துவமும் உண்மையும்

    அ. அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுக்கு உண்மையான தலைவருக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.
    ஆ. தேவன் நமது ஊழியத்தில் உண்மையை எதிர்பார்க்கிறார்.
    இ. ஏன் சில தலைவர்கள் பாதியிலேயே தங்கள் ஊழியத்தை விட்டு விடுகிறார்கள்.
    ஈ. தேவனுக்கு உண்மையான தலைவர்கள் தங்களுக்கு பின் வரும் ஊழியர்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள்.

5. தலைமைத்துவமும் தாழ்மையும்

GCI

அ. பவுல்: ஒரு தாழ்மையான தலைவர்
ஆ. தாழ்மையின் அடையாளங்கள்
இ. தாழ்மையின் ஆசீர்வாதங்கள்

6. தலைமைத்துவமும் கீழ்ப்படிதலும்

அ. இயேசுவே கீழ்ப்படிதலுக்கான சிறந்த உதாரணம்
ஆ. கீழப்படித- ல்லாத தலைவர்களின் மாதிரிகள்
இ. கீழ்ப்படிதலுள்ள தலைவர்களின் மாதிரிகள்
ஈ. நான்கு அடிப்படை அதிகார அமைப்புகள்
உ. கர்த்தர் தலைவர்களை வனைந்து கொள்கிறார்

7. தலைமைத்துவத்தின் மற்ற காரியங்கள்

அ. தலைவரும் அவரின் பக்தி வாழக்கையும்
ஆ. தலைவரும் அவரது தனிப்பட்ட வாழ்க்கையும்
இ. தலைவரும் அவரது அலவலக வாழ்க்கையும்

GCI

# 1. தலைமைத்துவத்தின் முக்கியத்துவம்

அ. தலைமைத்துவம் என்றால் என்ன?

1. தலைமைத்துவம் என்பது மற்றவர்களை கவர்ந்து கொண்டு தங்கள் திட்டத்தை அவர்களைக் கொண்டு நிறைவேற்றுவதாகும்.

   இயேசு நம் அனைவரையும் அவரை நம்பச்செய்து அவர்பின் தொடரச்செய்யும் ஆற்றல் உள்ளவராயிருக்கிறார்

   நாம் அவர் தலைமையை நம்புகின்றபடியால், அவருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து அவருக்கு சீஷர்களை உருவாக்க வேண்டும்

2. தலைமைத்துவம் என்பது ஒரு குறிப்பிட்ட குழு மக்களை ஓர் பொதுவான குறிக்கோளுக்கு நேராக வழிநடத்துவதாகும்.

3. பின்பற்றுகிறவர்கள் உள்ளவரே தலைவர்
   ஒருவர் தான் எல்லா தலைமைத்துவ பண்புகளையும் பெற்றிருக்கலாம். ஆனால் அவரை யாரும் பின்பற்றவில்லையென்றால் அவர் தலைவர் அல்ல.

ஆ. தலைமைத்துவம் என்பது மற்றவர்களுக்கு மாதிரியாயிருப்பதாகும்.

ஜான் கார்டனர் சொல்கிறார், தலைமைத்துவம் என்பது ஓர் தனிப்பட்ட நபர் தனது தூண்டுத- னாலும் மாதிரியினாலும் ஒரு குழுவை ஏற்படுத்தி அதன் முலம் தனது தனிப்பட்ட அல்லது குழுவின் பொதுவான நோக்கங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கின்றான்.

ஒரு தலைவன் பேசுவதோடு மாத்திரம் நிறுத்திக் கொள்ளக் கூடாது. செய- ல் காட்ட வேண்டும். மற்றவர்கள் பின்பற்ற ஒரு மாதிரியை வைத்து போக வேண்டும். (1கொரி 11:1)

1. இயேசு நமக்கு ஒரு மாதிரியை வைத்து விட்டுபோனார். (1 பேதுரு 2:21)

இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்.

2. மாதிரியை ஏற்படுத்தும்படி பேதுரு மூப்பர்களுக்கு அறிவுறுத்தினான். (1 பேதுரு5:3)

இ. தலைமைத்துவ அழைப்பு

தலைமைத்துவம் என்பது கர்த்தரிடம் இருந்து வரும் அழைப்பாகும். (யோவான் 15:16)

நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்.

GCI

1. தேவன் ஆபிரகாமை அழைத்தார். (ஆதி 12: 1-3)

கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ.

நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.

உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்.

2. தேவன் மோசேயை அழைத்தார். (யாத் 3:4)

அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டார். முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி: மோசே, மோசே என்று கூப்பிட்டார். அவன்: இதோ, அடியேன் என்றான்.

3. தேவன் பவுலை அழைத்தார். (1 கொரி 1:1)

தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனாகிய பவுலும்,...

தலைவர்கள் தங்கள் தாங்களே அல்ல தேவனால் அழைக்கப்பட்டிருக்க வேண்டும். உதாரணம்: கோரா தன்னை தானே தலைவனாக ஏற்படுத்தி கொண்டான். (எண்ணாமகம் 16)

ஈ. தலைமைத்துவ ஆயத்தம்.

தலைவன் தலைவனாகவே பிறந்தாலும் தலைமைத்துவ பொறுப்புகளை எடுத்து செய்ய தன்னை தகுதிப்படுத்திக் கொள்ள நேரம் பிடிக்கிறது.

1. எ- சா எ- யாவால் தலைவனாக ஆயத்தப்படுத்தப்படுகிறான்.

அவன் நிலத்தை உழுததின் மூலம் கடின உழைப்பை கற்றுகொண்டான். (1 இராஜா 19:19)

அப்படியே அவன் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப்போய், பன்னிரண்டு ஏர் பூட்டி உழுத சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவைக் கண்டான்; அவன் பன்னிரண்டாம் ஏரை ஓட்டிக்கொண்டிருந்தான், எலியா அவன் இருக்கும் இடமட்டும் போய், அவன்மேல் தன் சால்வையைப் போட்டான்.

ஆனால் ஊழியம் செய்ய எ- யாவிடம் இருந்து கற்றுக்கொண்டான். (2 இராஜா 3:11)

அப்பொழுது யோசபாத்: நாம் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படி கர்த்தருடைய தீர்க்கதரிசி ஒருவரும் இங்கே இல்லையா என்று கேட்டதற்கு, எலியாவின் கைகளுக்குத் தண்ணீர் வார்த்த சாப்பாத்தின் குமாரனாகிய எலிசா இங்கே இருக்கிறான் என்று இஸ்ரவேல் ராஜாவின் ஊழியக்காரரில் ஒருவன் மறுமொழியாகச் சொன்னான்.

GCI

2. தேவன் தாவீதை இராஜாவாக ஆயத்தப்படுத்தினார்.

மேய்ப்பனாக பயிற்சி செய்யப்பட்டான். 1சாமு 16:11

உன் பிள்ளைகள் இவ்வளவுதானா என்று ஈசாயைக் கேட்டான். அதற்கு அவன்: இன்னும் எல்லாருக்கும் இளையவன் ஒருவன் இருக்கிறான்; அவன் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறான் என்றான்; அப்பொழுது சாமுவேல் ஈசாயை நோக்கி: ஆள் அனுப்பி அவனை அழைப்பி; அவன் இங்கே வருமட்டும் நான் பந்தியிருக்க மாட்டேன் என்றான்.

அவன் மேய்ப்பனாக இருந்த போதே விசுவாசத்தில் பயிற்றுவிக்கப்பட்டான். 1 சாமு 17:36

அந்தச் சிங்கத்தையும் அந்தக் கரடியையும் உம்முடைய அடியானாகிய நான் கொன்றேன்; விருத்தசேதனமில்லாத இந்தப் பெலிஸ்தனும் அவைகளில் ஒன்றைப் போல இருப்பான்; அவன் ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்தித்தானே என்றான்.

பின் சவு- ன் ஆயுததாரியாகவும் இசை கலைஞனாகவும் இருந்து பயிற்றுவிக்கப்பட்டான்.

3. பவுல் தீமோத்தேயுவை தலைவனாக ஆயத்தப்படுத்தினான்.

தன்னுடன் பிரயாணத்தில் தீமோத்தேயுவையும் கொண்டு சென்றான். அப் 16:1,4

அதன்பின்பு அவன் தெர்பைக்கும் லீஸ்தீராவுக்கும் போனான். அங்கே தீமோத்தேயு என்னப்பட்ட ஒரு சீஷன் இருந்தான்; அவன் தாய் விசவாசமுள்ள யூதஸ்திரீ, அவன் தகப்பன் கிரேக்கன்.

அவர்கள் பட்டணங்கள்தோறும் போகையில், எருசலேமிலிருக்கும் அப்போஸ்தலராலும் மூப்பராலும் விதிக்கப்பட்ட சட்டங்களைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு ஒப்புவித்தார்கள்.

தேவன் நம்மையும் தலைமைத்துவத்திற்காக ஆயத்தப்படுத்துவார்:

1. தினசரி வேலைகளின் மூலம்
2. படிப்பின் மூலம்
3. தலைவர்களிடம் இருந்து கற்று கொள்வதின் மூலம்
4. சோதனை பாடுகளின் மூலம்

## 2. தலைமைத்துவமும் பரிசுத்தமும்

அ. தலைவர்களாகிய நாம் பரிசுத்தமாயிருக்க வேண்டும்

1. பிதாவாகிய தேவன் பரிசுத்தர். ஏசா 6:3

எ.கா. கொரிந்திய கபையின் வேசித்தனமும் விக்கிரக ஆராதனையும்

2. இயேசு பரிசுத்தர். லூக் 4:34

GCI

3. ஆவியானவர் பரிசுத்தர். ரோமர் 1:4

கேள்வி: பரிசுத்தம் யாருடைய பொறுப்பு?

1தெச 5:23

சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.

எபி 12:14

யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.

எப்படி நாம் பரிசுத்தத்தைக் காத்துக் கொள்வது?

1 தெச 5:23

சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.

1. ஆவி மண்டலத்தில்:

நாம் நம்மை விக்கிரக ஆராதனை (யாத். 20:3, 4) மற்றும் மந்திரவாதம் (லேவி 20:27; 19:26) போன்ற காரியங்களில் இருந்து விலக்கிக் காத்துக்கொள்ள வேண்டும்.

யாத். 20:3, 4

என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.

மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்;

2. ஆத்தும மண்டலத்தில்:

நாம் கசப்பாகிய வேரைக் குறித்தும் (எபி 12:15; எபேசியர் 4:31) அசட்டைபண்ணப்படுத- னால் வரும் கசப்பை குறித்தும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். (ஏசா 53:3)

எபி 12:15

ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கும் யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும்,

3. சரீர மண்டலத்தில்:

தலைவர்களாகிய நாம் வேசித்தனத்தைக் குறித்தும் (1 கொரி 6:19) மது, போதை வஸ்துக்கள் போன்ற கெட்ட பழக்க வழக்கங்களை குறித்தும் (1 கொரி 6:12) எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

GCI

1 கொரி 6:19

உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?

இ. கறைபடுவதற்கான வாய்ப்புகள்

1. கண் மத் 6:22

2. காது மாற்கு 4:24

3. வாய் எபே 4:29

4. சிந்தை 2 கொரி 10:5

ஈ. பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை வாழ்ந்த தலைவர்களின் மாதிரிகள்

1. காலேப் மற்றும் யோசுவா எண் 14:24

2. யோசேப்பு ஆதி 39:9-10

3. சாமுவேல் 1 சாமு 12:4

4. தானியேல் தானி 1:8

தானி 1:8

தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம்பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம்பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான்.

உ. பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை வாழாத தலைவர்களின் மாதிரிகள்

1. சாலொமோன்: 1 இராஜா 11:4

சாலொமோன் வயதுசென்றபோது, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நியதேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்; அதினால் அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருக்கவில்லை.

2. சிம்சோன்: நியாயா. 16:1

பின்பு சிம்சோன் காசாவுக்குப் போய், அங்கே ஒரு வேசியைக் கண்டு, அவளிடத்தில் போனான்.

## 3. தலைமைத்துவமும் நேர்மையும்

***அ. நீதி வாழ்க்கையின் அவசியம்***

GCI

1. நம் எதிரிகளினிமித்தம்.

சங் 5:8

கர்த்தாவே, என் சத்துருக்களினிமித்தம் என்னை உம்முடைய நீதியிலே நடத்தி, எனக்குமுன்பாக உம்முடைய வழியைச் செவ்வைப்படுத்தும்.

- ✓ சாத்தானும் தீய சக்திகளும்
  எபேசியர் 6:12
- ✓ சுவிசேஷத்தை எதிர்க்கும் உலக மக்கள்
  அப். 19:23-27

கேள்வி: நாம் நேர்மையான வாழ்ககை வாழாதிருந்தால் என்ன நடக்கின்றது?

*1. நாம் நம் எதிரிக்கு இடம் கொடுக்கின்றோம் (எபே 4:27)*
*2.நாம் நம் எதிரி நம்மை பரிகாசம் செய்ய தருணம் கொடுக்கிறோம்.*

2. அவருடைய நாம மகிமையின் பொருட்டு.

சங் 23:3

அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.

கொலோ 3:17

வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.

**ஆ. நேர்மையான தலைவர் பெறும் ஆசீர்வாதங்கள்.**

சங் 112, சங் 1

1. அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் சங். 1:3
2. அவன் பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள் சங். 112:2
3. தெய்வீக பாதுகாப்பு சங். 91
4. ஜெபங்கள் கேட்கப்படும் சங். 34:4
5. அவன் தேவபிரசன்னத்தை உடையவனாயிருப்பான் சங். 23:4

GCI

6. அவன் தேவசந்தோஷம் உடையவனாயிருப்பான் பி- . 4:4; நெகே. 8:10

7. துர்ச்செய்தி கேட்பதினால் பயப்படாதிருப்பான் சங் 112:7

8. தண்டனைக்கு தப்பி கொள்வான் சங் 34:19

**இ. நேர்மையான தலைவர்கள்**

1. மோசே எண். 16:15

2. யோசேப்பு ஆதி 39:8

3. எ- சா 2 இராஜா 5:16

**ஈ. நேர்மையில்லாத தலைவர்கள்**

1. போத்திபார் மனைவி ஆதி. 39: 7-8

2. ஆகான் யோசுவா 7:20-21

3. அனனியா சப்பீராள் அப் 5:1-11

**உ. நேர்மையுள்ள வாழ்க்கையின் முக்கிய கட்டங்கள்**

1. பால் எபி 13:4

2. பணம் எபி 13:5

3. வார்த்தைகள் யாக்கோபு 5:12

**ஊ. நேர்மை வாழ்க்கைக்கான திறவுகோல்கள்**

1. திருப்தி எபி 13:5; 1தீமோ. 6:6

2. தேவபிரசன்னத்தை குறித்த சிந்தையாயிருங்கள் எபி 13:5

3. பெரிய தேவ மனிதர்களை பின்பற்றுங்கள் எபி 13:7

4. வார்த்தையில் வேரூன்றுங்கள் சங் 119:9,11

GCI

5. ஜெபம் மத் 26:41

# 4. தலைமைத்துவமும் உண்மையும்

**அ. அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுக்கு உண்மையான தலைவருக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.**

1. தன் ஊழியத்தில் கஷ்டங்களும் துன்பங்களும் வந்தபோதுங்கூட அவன் ஒரு போதும் பின வாங்கவேயில்லை. 2கொரி 11:23-28.

2. நம் தேவன் உண்மையுள்ள தேவன். உபா. 7:9

**ஆ. தேவன் நமது ஊழியத்தில் உண்மையை எதிர்பார்க்கிறார்.**

ஆண்டவர் நமக்கு எவையெல்லாம் கொடுத்திருக்கின்றாரோ அவைகளை தவறாமல் உண்மையோடு உபயோகிக்க வேண்டும்.

1. நேரம் எபே. 5:15

2. பணம் மத் 25:14-30

3. வரங்கள் 1பேதுரு 4:10

**இ. ஏன் சில தலைவர்கள் பாதியிலேயே தங்கள் ஊழியத்தை விட்டு விடுகிறார்கள்?**

1. தவறுகளை சரிசெய்ய மறுக்கிறார்கள். (நீதி 12:1; எபே. 5:15)

2. சோர்வடைந்து போகிறார்கள்

- மோசே சோர்வடைந்து போனான். எண் 11:11-15

- விசுவாசிகளை சோர்வடையச் செய்வது சாத்தானின் வியூகம். தானி 7:25

3. தவறான குறிக்கோள். எபி 12:2

4. துரிதமாய் காரியங்கள் நடக்க ஆசைப்படுதல். பிரசங்கி 3:1; கலா. 6:7-9

**ஈ. தேவனுக்கு உண்மையான தலைவர்கள் தங்களுக்கு பின் வரும் ஊழியர்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள்.**

எபேசியர் 6:21
நமக்குப் பிரியமான சகோதரனும் கர்த்தருக்குள் உண்மையுள்ள ஊழியக்காரனுமாயிருக்கிற தீகிக்கு...

1. தீகிக்கு எபே 6:21

2. எப்பாபிரா கொலோ. 4:12

3. சிறந்த மாதிரி: இயேசு எபி 3:6

# 5. தலைமைத்துவமும் தாழ்மையும்

ஆதிசபையின் தலைவர்கள் தாழ்மையுள்ளவர்களாயிருந்தார்கள். 1பேதுரு 5:3

சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள்.

***அ. பவுல்: ஒரு தாழ்மையுள்ள தலைவர்***

1. பவுலுக்கு குறிப்பிடத்தக்க சிறப்பான பிண்ணணி இருந்தும் அவர் தாழ்மையுள்ள தலைவராய் விளங்கினார்.

பி- 3:4-6

மாம்சத்தின்மேல் நம்பிக்கை வைக்கவேண்டுமானால் நானும் வைக்கலாம்; வேறொருவன் மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிருக்க நினைத்தால் நான் அதிகமாய் அப்படிச் செய்யலாம்.

நான் எட்டாம் நாளிலே விருத்தசேதனமடைந்தவன், இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான், எபிரெயரில் பிறந்த எபிரெயன், நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்;

பக்திவைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன், நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன்.

- ✓ தர்சு பட்டணத்தில் பிறந்தவர் அப் 22:3
- ✓ பரிசேயன் பி- 3:5
- ✓ ஒரு ரோம பிரஜை அப் 22:25-28
- ✓ கமா- யே- டம் கற்றவர் அப் 22:3

2. பவுல் ஊழிய இருதயம் கொண்டவர்.

பவுல் தன் தலைவர் இயேசுவை பின்பற்றினார் 1கொரி 11:1; மாற்கு 10:45

நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.

***ஆ. தாழ்மையின் அடையாளங்கள்.***
ரோமர் 12:3

GCI

அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது; உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத்தேவன் பகிர்ந்தவிசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்.

1. தாழ்மை மற்றவர்களால் செய்ய முடியாத காரியத்தை கூட அவர்களை தாழ்வாக எண்ணாமல் செய்ய முடியும். பி- 2:14

2. தாழ்மை ஒரு தலைவரை அகந்தையுள்ளவராக அல்ல மென்மையானவராக மாற்றுகிறது. 1 பேதுரு 5:3; 1தீமோத். 3:3

3. தாழ்மை ஒரு தலைவர் அங்கிகாரம் அல்லது கனம் கிடைக்காத ஒரு ஊழியத்தை கூட சந்தோஷமாக செய்ய வைக்கிறது. எபி 6:10

4. பழிவாங்குதல் அல்லது கசப்பான ஆவியி- ருந்து காக்கிறது. எண் 12:3

5. கீழ்மட்ட மக்களோடு கூட நன்றாக பழக உதவி செய்கிறது. ரோ 12:6

6. சுய நாட்டம் இல்லாதது. பி- 2:3; சங் 75:6

7. தாழ்மை தன்னை காட்டிலும் மற்றவர்களை மேன்மையாக எண்ணுகிறது. பி- 2:3

8. தாழ்மை மற்றவர்களின் கருத்துக்கள் மற்றும் அறிவுரைகளை விருப்பத்துடன் ஏற்கிறது. நீதி 12:15

**இ. தாழ்மையினால் வரும் நன்மைகள்.**

1பேதுரு 5:5
அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.

1. கர்த்தர் உன் பக்கம் இருக்கிறார்

2. கர்த்தர் உனக்கு கிருபையளிக்கிறார்.

3. கர்த்தருடைய பெலனும் பிரசன்னமும் உன்னோடு இருக்கின்றது.

## 4. தலைமைத்துவமும் கீழ்ப்படிதலும்

ஏசாயா 1:19-20

ஏசாயா இரண்டு காரியங்களை விவரிக்கிறார்.

மனப்பூர்வமான கீழ்ப்படிதல் — எதிர்த்து கலகம் செய்தயல்

பின் அதற்கான விளைவுகளையும் அறிவிக்கிறார்.

GCI

தேசத்தின் நன்மையை புசிப்பீர்கள் – பட்டயத்தால் அழிவீர்கள்

நம் பிரதான மேய்ப்பருக்கும், போதக மேய்ப்பர்களுக்கும் மனதார கீழ்ப்படிய வேண்டும்.

ஏசா 1:19-20

நீங்கள் மனம்பொருந்திச் செவிகொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள்.

மாட்டோம் என்று எதிர்த்துநிற்பீர்களாகில் பட்டயத்துக்கு இரையாவீர்கள்; கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று.

***அ. கீழ்ப்படிதலுக்கு மாதிரி இயேசு கிறிஸ்து.***

தன் பெற்றோருக்கு கீழ்ப்படிந்தார்.

லூக் 2:51-52

பின்பு அவர் அவர்களுடனே கூடப்போய், நாசரேத்தூரில் சேர்ந்து, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார். அவருடைய தாயார் இந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்துக் கொண்டாள்.

இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்.

கீழ்ப்படித- ன் ஆசீர்வாதங்கள்:

1. இயேசு ஞானத்தில் வளர்ந்தார்
2. இயேசு தேவ தயவில் வளர்ந்தார்
3. இயேசு மனித தயவில் வளர்ந்தார்.

***ஆ. கீழப்படித ல்லாத தலைவர்களின் மாதிரிகள்***

1. சவுல் 1சாமு 15:10-11, 22-24
2. நாதாப் மற்றும் அபியூ லேவி 10: 1-2

***இ. கீழ்ப்படிதலுள்ள தலைவர்களின் மாதிரிகள்***

1. நோவா ஆதி 6:22
2. பவுல் அப் 26:19
3. மரியாள் லூக் 1:38

***ஈ. நான்கு அடிப்படை அதிகார அமைப்புகள்***

1. குடும்பம். எபே 5:22-24

மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள்.

GCI

கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்.

ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும்.

2. அரசாங்கம். ரோமர் 13:1

எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது.

3. சபை. எபி 13:17

உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே.

4. முதலாளி அல்லது மேலதிகாரி. கொலே 3:22

வேலைக்காரரே, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்து, நீங்கள் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ்செய்யுங்கள்.

***உ. தேவன் தலைவர்களை வனைந்து கொள்கிறார்.***

1. தேவன் மனித அதிகாரத்தை பயன்னடுத்துவார் ரோ 13:1-7

2. தேவன் சோதனைகளை பயன்படுத்துவார் யாக் 1:2-3

## 7. தலைமைத்துவத்தின் மற்ற பரிமாணங்கள்

***அ. தலைவரும் அவரது பக்தி வாழ்க்கையும்***

1. அவர் தினசரி தேவனை ஆராதிப்பதில் தவறாமல் நேரம் செலவிட வேண்டும். யோவான் 4.24

2. அவர் தினசரி ஜெபிப்பதில் தவறாமல் நேரம் செலவிட வேண்டும். 1தெச 5:17

3. அவர் தினசரி வேதத்தை படிப்பதில் தவறாமல் நேரம் செலவிட வேண்டும். கொலோ 3:16

4. அவர் தினசரி வேத வசனங்களை தியானம் செய்யவும் மனப்பாடம் செய்யவும் தவறாமல் நேரம் செலவிட வேண்டும். யோசுவா 1:8

GCI

5. அவர் அவத வசனங்களுக்கு கீழ்ப்படிய வேண்டும். யோவான் 15:10

**ஆ. தலைவரும் அவர் தனிப்பட்ட வாழ்க்கையும்.**

1. தலைவர் தனது உடல் நலத்தை பேணி பாதுகாத்துக் கொள்ள வேண்டும். 1கொரி 3:16-17

- ✓ நல்ல சரிவிகித உணவு
- ✓ நல்ல ஓய்வு
- ✓ நல்ல உடற்பயிற்சி

2. அறிவாற்ற- ல் வளர முயற்சி எடுக்க வேண்டும்.

- ✓ எதாவது படிப்பில் இணைந்து படிக்கலாம் அல்லது கருத்தரங்குகள் கலந்து கொள்ளலாம்.
- ✓ நல்ல புத்தகங்கள் படிக்கலாம்

3. குடும்பத்தில் கவனம் செலுத்த வேண்டும்

- ✓ மனைவியுடன் நல்லுறவை வளர்க்க வேண்டும். 1தீமோ 3:2; எபே 5:25-33
- ✓ மனைவி பிள்ளைகளுடன் நேரம் செலவழிக்க வேண்டும்.

**இ. தலைவரும் அவர் அலுவலக வாழ்க்கையும்**

1. தலைவர் இலக்கை நிர்ணயிக்கும் பொறுப்பை வகிக்கிறார். நீதி 29:18
2. தலைவர் மற்றவர்களை ஊக்குவிக்கவேண்டும். எபி 10:24
3. தலைவர் ஒற்றுமைக்கு வழிவகுக்க வேண்டும். சங் 133:1
4. தலைவர் சண்டை போடுகிறவராக அல்ல சமாதனப்படுத்துபவராக இருக்க வேண்டும். சிலர் நன்றாக நடத்துவார்கள் ஆனால் சிடுமூஞ்சியாயிருப்பார்கள். 2தீமோ 2:24
5. தலைவர் விளக்கி கூறுபவராய் இருக்க வேண்டும். மோசே நியாய பிரமாணத்தை விளக்கினான். பவுல் தேவ வார்த்தையை மக்களுக்கு போதித்தான்.
6. தலைவர் ஒரு பிரதிநிதியாக விளங்குகிறார். ஒரு குறிப்பிட்ட சபைக்கோ அல்லது ஊழிய அமைப்புக்கோ பிரதிநிதியாவார். மோசே மக்களுடைய பிரதிநிதியாக தேவனிடம் பேசினான். யாத் 18:19
7. தலைவர் தனது காரியங்களில் உறுதியான நிலையுள்ளவராக அதே நேரம் நெகிழ்வு தன்மையுடைவராக இருக்க வேண்டும்.சில தலைவர்கள் உறுதியாயிருப்பார்கள் ஆனால் தேவைப்படும் நேரம் வளைந்து கொடுக்க

GCI

தவறிவிடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்கள் வேலையை வெற்றியாய் முடித்தாலும் மக்கள் நன்மதிப்பை இழந்து விடுவார்கள்.

8. தலைவர் என்பவர் நல்ல முடிவுகளை எடுக்கும் திறன் பெற்றவராக இருக்க வேண்டும்.

9. தலைவர் என்பவர் வார்த்தையிலும் செய்கையிலும் நம்பத்தக்கவராயிருக்க வேண்டும். சிலர் நிறைய சொல்வார்கள் ஆனால் எதையும் செய்ய மாட்டார்கள். இவர்கள் மக்களின் நம்பிக்கையை இழந்து விடுவார்கள்.

10. தலைவர் சாதுரியமுள்ளவராக இருக்க வேண்டும். முரட்டுக்காளையை போன்று இருக்கக் கூடாது. இதனால் மக்கள் இடறிப்போவார்கள்.

11. தலைவர் முத்த போதகர் மற்றும் உடன் தலைவர்களோடு சேர்ந்து ஒரே தரிசனத்திற்காக ஓட வேண்டும். வேறு திசையில் ஓடும் தலைவர் திறம்பட ஓடினாலும் நல்ல தலைவராக விளங்க முடியாது.

12. தலைவர் என்பவர் நெருக்கடி நேரங்களில் நல்ல விடை காண்பவராய் இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு முன் சூழ்நிலையை நன்கு விளக்கி விடைகாண ஊக்குவிப்பவராய் இருக்க வேண்டும்.

13. தலைவர் தனது மக்கள் தவறு செய்யும் போது சுட்டிக் காட்டி திருத்துபவராய் இருக்க வேண்டும். நீதி 27:5

14. தலைவர் மற்றவர்களின் விமர்சனத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். நீதி 1:5

15. தலைவர் தன் மக்களுக்கு முன் நேர்மையானவராய் இருக்க வேண்டும். நீதி 14:5

16. தலைவர் வாய்மையுள்ளவராய் இருக்க வேண்டும். 2நாளா 12:38

17. தலைவர் தனது இலக்குகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். மத் 4:19

18. தலைவர் பொறுப்புகளை பகிர்ந்தளிக்க வேண்டும். யாத் 18:17-23.

**List of References**:-


1. Bill Gothard, *Institute in Basic Life Principles*.
2. John W. Gardner, *The Tasks of a Leader*.
3. Eugene B. Habecker, *The Other Side of Leadership,* (Illinois: Victor Books), 1989.
4. Frank Damazio, *The Making of a Leader* (Oregon: Bible Temple Publishing) 1988.
5. John Maxwell, *Learning the 21 Irrefutable Laws of Leadership with John Maxwell,* (Atlanta: Equip) 1999.